**இலங்கை புடைவை மற்றும் ஆடைகள் நிறுவகம் - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை புடைவை மற்றும் ஆடைகள் நிறுவகத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின்ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் தாக்கத்தைத் தவிர்த்து நிறுவகத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை

இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிறுவகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிறுவகத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிறுவகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- நிறுவகத்தின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- நிறுவகத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது

குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை "திட்டமிட்டு பேணுதல்" நிறுவனங்களிற்கு அவசியமாக உள்ளது.

**1.5.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை**

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| | உரிய நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 2 இன் 9 ஆம் பிரிவின் பிரகாரம் முதலீடு ஒன்று பொதுவாக மூன்று மாதங்களுக்கு ஒரு குறுகிய முதிர்ச்சியைக் கொண்டிருக்கும் போது மாத்திரமே காசிற்கு சமமானதாகத் தகுதி பெறுகின்ற போதிலும் ஒரு வருட காலப்பகுதிக்கு முதலீடு செய்யப்பட்ட ரூபா 4,777,943 தொகை காசிற்குச் சமமானவையாக இனங்காணப்பட்டிருந்தது. மேலும், குறித்த நியமத்தின் 40 ஆம் பிரிவின் பிரகாரம் முதலீடுகள் மீதான வட்டியாகப் பெறப்பட்ட ரூபா 22,159,341 தொகை காசுப்பாய்ச்சலொன்றாக தனியாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | தொடர்ந்துவரும் ஆண்டில் காசுப்பாய்ச்சல் கூற்றில் இதனை சரியாக சுட்டிக்காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | காசுப்பாய்ச்சல்கள் தொடர்பாக இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 7 இன் 42 ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவகத்திற்கு சொந்தமான காணிகளின் பெயரளவு பெறுமதியாக ரூபா 5,018,434 தொகை நிதிக்கூற்றுக்களில் சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதிலும் அந்த காணிகள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு அவற்றின் நியாயமான பெறுமதிகள் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | மீள்மதிப்பீடு செய்வதற்கான கோரிக்கைகள் விலைமதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் குறித்த அறிக்கை பெறப்பட்ட பின்னர் நிதிக்கூற்றுக்களில் நியாயமான பெறுமதியை உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அக் காணிகளின் நியாயமான பெறுமதி நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட ரூபா 204,839,496 கிரயமான ஆதனம், | மீள்மதிப்பீட்டு அறிக்கை இதுவரை பெறப்பட்டிருக்காததுடன் அது கிடைத்தவுடன் விரைவில் | முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட சொத்துக்கள் பயன்படுத்தப்படும் |

| | | |
|---|---|---|
| பொறி மற்றும் உபகரணங்கள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 7 இன் பிரகாரம் இன்னும் பயன்பாட்டில் இருந்த போதிலும் அவை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 3 இன் பிரகாரம் அச் சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் தொடர்பாக மதிப்பிடப்பட்ட தவறை மீளாய்வு செய்து நிதிக்கூற்றுக்களில் அவற்றை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சமர்ப்பிக்கப்படும். | போது அது நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டியதுடன் அச் சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் தொடர்பாக மதிப்பிடப்பட்ட தவறை மீளாய்வு செய்து அவற்றை நிதிக்கூற்றுக்களில் சீர்செய்வதற்கு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய நிலையான வைப்பு முதலீடு (அழைப்பு வைப்பு) மீதான வட்டி வருமானம் ரூபா 9,195,787 ஆக இருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களில் அது ரூபா 7,341,295 ஆகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனால் நிதிக்கூற்றுக்களில் ஆண்டின் வட்டி வருமானம் ரூபா 1,854,492 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டுக்கான கணக்குகளை தயாரிக்கும் போது இதனை சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக்களில் ஆண்டிற்கான வட்டி வருமானம் சரியாக குறிப்பிடப்பட வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டியவைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவக் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பெறவேண்டிய மீதியானது 42 கடன்பட்டோர்களிடமிருந்து 05 ஆண்டு காலப்பகுதிக்கு மேலாக பெறப்பட வேண்டிய ரூபா 948,156 தொகையையும், 3 முதல் 5 ஆண்டுகளிற்கு இடைப்பட்ட காலப்பகுதியில் 35 கடன்பட்டோரிடமிருந்து பெறப்பட வேண்டிய ரூபா 3,757,350 | கடன்பட்டோர் அறிக்கைகள் உரிய பிரிவுகளுக்கு சமர்ப்பிக்கப்படும் அத்துடன் கடனாளிகளுக்கு நினைவூட்டல்கள் அனுப்பப்பட்டுள்ளன. | கடன்பட்டோர் மீதிகளை அறவீடு செய்வதற்காக உரிய கவனம் செலுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொகையையும் உள்ளடக்கியிருந்ததுடன் அம் மீதிகளை அறவீடு செய்வதற்கு போதியளவு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | ரூபா 4,306,291 பெறுமதியான ஆடை மாதிரிகளை பரிசோதித்தல் தொடர்பான சேவைகள் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சுக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் குறித்த தொகை 2021 நவம்பர் வரையிலும் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | பல சந்தர்ப்பங்களில் கடிதங்கள் மூலம் அறிவிக்கப்பட்டிருந்ததுடன் 2021 நவம்பர் 30 இலும் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டியவைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2015 ஆம் ஆண்டில் பயன்படுத்தப்பட்ட 05 மோட்டார் வாகனங்களை விற்பனை செய்ததன் மூலம் பெறப்பட்ட ரூபா 3,871,448 தொகையானது 2018 மார்ச் 19 ஆம் திகதிய 01 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் திறைசேரிக்கு அனுப்பப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போதும் குறித்த மீதியானது நானாவித கடன்கொடுத்தோரின் கீழ் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. | மோட்டார் வாகனங்களை விற்பனை செய்வதன் மூலம் பெறப்பட்ட தொகை ஆளுநர் சபையின் அங்கீகாரத்துடன் பொது திறைசேரிக்கு மீள செலுத்தப்படவுள்ளது. | மோட்டார் வாகனங்களை விற்பனை செய்வதன் மூலம் பெறப்படும் தொகைகள் திறைசேரிக்கு அனுப்பப்பட வேண்டும். |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | | இணங்காமைகள் | முகாமைத்துவக் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|
| (அ) | 1994 யூன் 14 ஆம் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை மற்றும் 2000 சனவரி 11 ஆம் திகதிய பிஎவ்/பிஈ 5 ஆம் இலக்க அரச நிதிச் | (i) | நிறுவகத்தால் ஊழியர்களுக்கு வழங்கப்படும் அனைத்து படிகளுக்கும் பொது திறைசேரியின் அங்கீகாரம் பெறப்பட வேண்டிய போதிலும் ஆய்வுகூட பரிசோதனைகள் மற்றும் வார இறுதி கற்கைநெறிகளுக்கான | நிறுவகம் 2015 ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக வரிசை அமைச்சின் ஊடாக பொது திறைசேரியின் அங்கீகாரத்தை கோரியிருந்தது. குறித்த படிகள் தொடர்பான அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்தை | ஊழியர்களுக்கு வழங்கப்படும் அனைத்து கொடுப்பனவுகளுக்கும் பொது திறைசேரியின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | சுற்றறிக்கை | ஊழியர்களின் படிகள், ஆலோசகர்களின் படிகள், கற்கைநெறிகளை ஒருங்கிணைப்பதற்கான கட்டணங்கள் போன்ற மீளாய்வாண்டில் செலுத்தப்பட்ட ரூபா 1,555,032 கூட்டுமொத்தமான படிகளுக்கு அத்தகைய அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | பெற்றுக்கொள்வதற்காக 2020.08.04 மற்றும் 2020.09.03 ஆம் திகதிய கடிதங்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. மேலும், 2021 திசெம்பர் 07 இல் தேசிய சம்பள ஆணைக்குழுவுடன் கலந்துரையாடல் நடாத்தப்பட்டு, அந்த அறிக்கை கிடைத்தவுடன் தேவையான நடவடிக்கைகள் விரைவில் எடுக்கப்படும். | |
| | | (ii) ஊழியர்களின் மருத்துவக் காப்புறுதிக்கான வருடாந்த தவணைப்பணமாக ரூபா 360,562 தொகையும் மருத்துவக் கட்டணங்களை மீள்நிரப்புச் செய்வதற்காக ரூபா 1,276,211 தொகையும் பொதுத் திறைசேரியின் அங்கீகாரமின்றி செலுத்தப்பட்டிருந்தன. | ஊழியர்களின் மருத்துவக் காப்புறுதிக்கு ஆளுநர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. | ஊழியர்களுக்கு வழங்கப்படும் அனைத்து கொடுப்பனவுகளுக்கும் பொது திறைசேரியின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும். |
| (ஆ) | 2015 மே 25 ஆம் திகதிய பிஈடி/2/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 2 ஆம் பந்தி | தொடர்பாடல் விலைப்பட்டியல்கள் ஆகக்கூடிய எல்லைக்கு உட்பட்டு மீள்நிரப்புச் செய்யப்பட வேண்டிய போதிலும் விலைப்பட்டியல்களை மீள்நிரப்புச் செய்வதற்குப் பதிலாக சம்பளத்துடன் அதிகபட்ச படிகளைச் சேர்ப்பதன் மூலம் கொடுப்பனவுகளை நிறுவகம் மேற்கொண்டிருந்தது. ஆகையால் 2019 ஆம் ஆண்டில் மேலதிகமாக செலுத்தப்பட்ட ரூபா 346,800 தொகை மீளாய்வாண்டிலும் மீள்நிரப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. | 2020 திசெம்பர் முதல் விலைப்பட்டியல்களை மீள்நிரப்பு செய்வதற்கும் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் மேலதிகமாக செலுத்தப்பட்ட தொகையை அறவீடு செய்வதற்கு மேலும் நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் திசெம்பர் வரையிலும் குறித்த நடைமுறை பின்பற்றப்பட்டிருந்தது. | | |
| (இ) | 2018 சனவரி 24 ஆம் திகதிய 05/2018/(1) ஆம் இலக்க சுற்றறிக்கை மூலம் திருத்தப்பட்ட பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் 2008 பெப்ரவரி 06 ஆம் திகதிய 05/2008 ஆம் இலக்க சுற்றறிக்கை | குடிமக்கள்/ சேவைநாடுநர்களின் பட்டயம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | குடிமக்கள்/ சேவைநாடுநர்களின் பட்டயம் தொடர்பாக மேலும் ஆய்வுகளை மேற்கொள்வதன் மூலம் அதனை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கைகளின் பிரகாரம் குடிமக்கள்/ சேவைநாடுநர்களின் பட்டயம் தயாரிக்கப்பட வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 1,455,408 மிகையொன்றாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 19,345,190 ஆக காணப்பட்டதால் நிதி விளைவுகளில் ரூபா 17,889,782 தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. பயிற்சி மற்றும் ஆலோசனை சேவைகளை வழங்குவதிலிருந்தான வருமானம் ரூபா 52,091,255 ஆல் குறைவடைந்தமை இவ் வீழ்ச்சிக்கு பிரதானமாக பங்களித்திருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவக் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2009 இன் 12 ஆம் இலக்க இலங்கை புடைவை மற்றும் ஆடைகள் நிறுவக சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவக பதவியணியினரின் திறன்கள் மற்றும் அறிவை மேம்படுத்தும் நோக்கத்திற்காக பதவியணியினர் அபிவிருத்தி நிதியமொன்று நிறுவப்படலாம். சம்பந்தப்பட்ட ஆண்டிற்காக நிறுவகத்தால் பெறப்பட்ட வருமானத்தின் அத்தகைய | கடன்பட்டோர் பெறுவனவுகள் தொடர்பாக நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டுள்ள 5 சதவீதத்திற்கு அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. | வருமானத்திலிருந்து நிதியத்திற்கு வருடாந்தம் செலவு வைக்கப்படும் சதவீதத்திற்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சதவீதம் பதவியணியினர் அபிவிருத்தி நிதியத்திற்கு வருடாந்தம் செலுத்தப்படும், எனினும், 2020 ஆம் ஆண்டு தொடர்பான கடன்பட்டோர் பெறுவனவுகளில் 0.5 சதவீதம் சபையின் அங்கீகாரமின்றி நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | 2015 ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்ற அமைச்சரவை அங்கீகாரத்தின் பிரகாரம், புதிய நான்கு மாடிக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கான விலைமனுக்களை கோருவதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட வேண்டிய பல்வேறு செயற்பாடுகளுக்காக ரூபா 3,762,600.00 தொகையான செலவினம் ஏற்பட்டிருந்த போதிலும் நிதியேற்பாட்டை பெற்றுக்கொள்வதில் உள்ள சிரமங்களின் விளைவாக நிர்மாணங்களை நிறுத்துவதற்கு எடுக்கப்பட்ட தீர்மானம் காரணமாக மொத்த செலவினமும் பயனற்றதாகியிருந்தது. | நிறுவகம் மற்றும் பொது திறைசேரியால் மேற்கொள்ளப்பட்ட நிதியேற்பாட்டின் மீது புடைவை மற்றும் ஆடைகள் நிறுவகத்திற்கு இன்றியமையாத காரணியான முழுமையாக பூர்த்தி செய்யப்பட்ட கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக 2015 ஆம் ஆண்டில் அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது.<br><br>விலைமனுக்களை கோருவதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட வேண்டிய பல்வேறு செயற்பாடுகளுக்காக இதுவரை நிறுவகத்தினால் ரூபா 3,631,958.00 செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் 2020 ஆம் ஆண்டில் உலகை பாதித்த கொவிட் தொற்றுநோய் காரணமாக நிறுவகம் அல்லது பொது திறைசேரியால் அதற்கான நிதியேற்பாட்டை ஒழுங்கு செய்வதில் சிரமம் ஏற்பட்டது. மேற்கூறிய அனைத்து விடயங்களையும் கவனத்தில் கொண்டு, அமைச்சரவை அங்கீகரித்த பெறுகை குழு நிர்மாணங்களை மேற்கொள்வதற்கு எதிராக தீர்மானத்தை எடுத்திருந்தது. | நிர்மாணங்கள் தொடர்பான முன்மொழிவுகளின் போது நிதியேற்பாட்டை மேற்கொள்வதற்கான அங்கீகாரத்தை பெற்றுக்கொண்ட பின்னரே ஆரம்ப நடவடிக்கைகளுக்கான செலவினங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவக் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2009 இன் 12 ஆம் இலக்க இலங்கை புடைவை மற்றும் ஆடைகள் நிறுவக சட்டத்தின் 5 (இ) பிரிவின் பிரகாரம், புடைவை மற்றும் ஆடை கைத்தொழில் தொடர்பான பட்டங்கள் மற்றும் முதுகலை பட்டங்கள் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு பல்கலைக்கழகங்கள் மற்றும் நிறுவனங்களுடன் உடன்படிக்கைகளை கைச்சாத்திடுவதன் மூலம் வழங்கப்பட வேண்டிய போதிலும் குறித்த நடவடிக்கைகள் தனியார் இந்தியப் பல்கலைக்கழகம் ஒன்றுடன் மாத்திரமே மேற்கொள்ளப்பட்டிருந்தன. | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட இரண்டு இந்திய உயர்கல்வி நிறுவனங்களுடன் இணைந்து தோல் மற்றும் பாதணிகள் மற்றும் புடைவை மற்றும் ஆடைகளில் பட்டங்களை வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. மேலும், ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்துடன் இணைந்து B. Tech இல் பட்டத்தை வழங்குவதற்கு பரிசீலிக்கப்பட்டு வருகின்றதுடன் இலங்கை தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகத்துடன் (UNIVOTEC) இணைந்து பட்டமொன்றை வழங்குவதற்கு தேவையான அடிப்படை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | ஒருங்கிணைந்த சட்டத்தின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு நிறுவகம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2009 இன் 12 ஆம் இலக்க இலங்கை புடைவை மற்றும் ஆடைகள் நிறுவக சட்டத்தின் 4 (i) ஆம் பிரிவின் பிரகாரம் உற்பத்தி, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி தொடர்பான தகவல்கள் மற்றும் புடைவை மற்றும் ஆடை கைத்தொழில் தொடர்பான ஏனைய தொழில்நுட்பத் தகவல்கள் உள்ளடங்கிய தரவுத் தளம் ஒன்று பேணப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தனியான பதவியணியினரை ஆட்சேர்ப்பு செய்வதற்கும், தரவுத்தளத்தை பராமரிப்பதற்கான முறைமையொன்றை நிறுவுவதற்கும் கிரயமொன்றை செலவிட வேண்டியுள்ளதுடன் இந்த விடயம் கவனத்தில் கொள்ளப்படும். | ஒருங்கிணைந்த சட்டத்தின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு நிறுவகம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | அமைச்சின் நிதியேற்பாடுகளின் அடிப்படையில் அமுல்ப்படுத்தப்பட்ட சுகாதார மற்றும் பாதுகாப்பு செயற்திட்டத்தின் மூலம் | இது அமைச்சரவை அங்கீகாரத்தின் அடிப்படையில் அமுல்ப்படுத்தப்பட்ட செயற்திட்டம் ஒன்றாகும். | மூலப்பொருட்களின் தரம் தொடர்பாக தேவையான சட்ட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட |

| | | |
|---|---|---|
| ஆடைகளின் தரத்தை பரிசோதிப்பதற்காக ரூபா 2,237,112 பெறுமதியான இயந்திரம் ஒன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் குறித்த இயந்திரத்தைப் பயன்படுத்தி மூலப்பொருட்களின் தரம் தொடர்பான சான்றிதழை வழங்குவதற்கு தேவையான சட்ட ஏற்பாடுகளுக்கான அங்கீகாரம் மீளாய்வாண்டில் பெறப்பட்டிருக்கவில்லை. | இச் செயற்திட்டம் தொடர்பில் சுகாதார அமைச்சு, பாடசாலைகள் மற்றும் தொழிற்சாலைகளுக்கு விளக்கமளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் ஆரம்ப கட்டத்தில் 05 தொழிற்சாலைகளுக்கான சான்றிதழ்களை இலவசமாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. | வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 ஆண்டறிக்கைகளை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2009 இன் 12 ஆம் இலக்க இலங்கை புடைவை மற்றும் ஆடைகள் நிறுவக சட்டத்தின் 16 ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவகம் ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலும், அந்த ஆண்டின் போதான அதன் செயற்பாடுகள் தொடர்பான அறிக்கையை வெளியிட்டு, அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டதன் அடிப்படையில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும். எனினும், நிறுவகம் 2019 ஆம் ஆண்டுக்குரிய குறித்த அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கத் தவறியிருந்தது. | 2019 ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கையை 2022 சனவரி மாத இறுதியளவில் சமர்ப்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 4.2 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2009 இன் 12 ஆம் இலக்க இலங்கை புடைவை மற்றும் ஆடைகள் நிறுவக சட்டத்தின் பிரகாரம் நிறுவகத்தை நிறுவுவதற்கான பத்து நோக்கங்கள் குறிப்பிடப்பட்டிருந்ததுடன் அந்த நோக்கங்களை அடைந்துகொள்ளும் வகையில் நிறுவகத்தின் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் கற்கைநெறிகளை நடாத்துவது மாத்திரமே அதில் உள்ளடக்கப்பட்டுள்ளது. | நோக்கங்களை அடைந்துகொள்ளும் வகையில் நிறுவகத்தின் செயல்நடவடிக்கைத் திட்டத்தை தயாரிப்பது தொடர்பில் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | நோக்கங்களை அடைந்துகொள்ளும் வகையில் நிறுவகத்தின் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |